**20.03.2023. அ.வ.எண். 101 /2016 வா.சா.1 - திரு.நாகராஜன்**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வழக்கு சொத்தை வைத்து எனது தாயார் மூலமாக சிவகங்கை டி.மு கோர்ட்டில் ஓ.எஸ் நம்பர் 153/2015 வழக்கு தாக்கல் செய்தேன். எனது அம்மா தாவா சொத்தில் இருப்பதாகவும், சட்டப்படியின்றி காலிசெய்ய கூடாது என வழக்கு போட்டிருந்தோம். அந்த வழக்கில் எனது தாயார் சாட்சியம் அளிக்கவில்லை. நான்தான் சாட்சியம் அளித்தேன். என் அப்பா டிரைவராக பிரதிவாதி குடும்பத்தில் வேலை பார்க்கவில்லை. எனக்கு சிறுவயதிலிருந்து பிரதிவாதியின் குடும்பத்தை தெரியும், அங்கு போய் வருவேன். எங்கள் குடும்பத்திற்கும், பிரதிவாதியின் குடும்பத்திற்கும் வரவு, செலவு கிடையாது. வாடகை மட்டும் கொடுப்போம். வா.சா.ஆ.1. 25.04.1999ம் தேதி கிரைய ஒப்பந்தம் போட்டோம். நம்பிக்கையின் பேரில் பத்திரத்தில் எழுதி வாங்கவில்லை. எனென்றால் பிரதிவாதியின் குடும்பம் எங்களுக்கு நம்பிக்கையான குடும்பம். வா.சா.ஆ.1. ஆவணத்தில் 2வது பக்கத்தில் தொகை எழுதியது நான் தான். அந்த தொகை எழுதிய இடத்தில் பிரதிவாதியிடம் கையெழுத்து கேட்டேன். அவர் பத்திரம் பதிந்து தருவதாக சொன்னார். அதில் கண்டுள்ள 6வது அயிட்ட தொகையை பிரதிவாதியின் வங்கி கணக்கில் போட்டேன். டிராப்ட் எடுத்து கொடுக்கவில்லை. டி.டி.மூலம் ரூ. 25 ஆயிரம் கொடுத்ததாக சொல்லியிருந்தால் தவறு. பிரதிவாதி எந்த கிரைய ஒப்பந்தமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதியின் வீட்டில் வாடகைக்கு இருந்து கொண்டு அவரை பிளாக்மெயில் செய்து எனது தாயார் மூலம் ஒரு வழக்கும், கிரைய ஒப்பந்தத்தை மோசடியாக உற்பத்தி செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. வங்கி மூலமாக செலுத்திய தொகை பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய வாடகை தொகையை வருடத்திற்கு ஒரு முறை செலுத்தியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் மூன்று சகோதரர்களுக்கு பாத்தியப்பட்ட பிரிவினை இல்லாத சொத்து. பிரதிவாதி இதய நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியம் செய்து வருகிறார். மற்ற சகோதரர்கள் தொழில் நஷ்டம் ஏற்பட்டு குடும்ப

கஷ்டத்திற்காக விற்பனை செய்வதை



தடுப்பதற்காக தாவா வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சொத்து விபரம் காண்பித்துள்ளேன். வா.சா.ஆ.1. பிரதிவாதியின் கையெழுத்தை பயன்படுத்தி மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வங்கி மூலமாக பிரதிவாதி பணம் செலுத்துவதற்கான சலான் வங்கி கணக்கு தாக்கல் செய்யவில்லை.